# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3646/SCIC/2023**

திருமதி S. உமா மகேஸ்வரி மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி. --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 17.11.2022 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், பத்திரப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், ஆள்மாறாட்டம் செய்து மோசடியாக போலி ஆவணங்கள் மூலம் செய்த பதித்திரப்பதிவை ரத்து செய்ய மூன்று முறை K. சாத்தனூர் சார்பதிவாளர், திருச்சி மாவட்டப்பதிவாளர் பத்திரப்பதிவுத்துறைத் தலைவர் ஆகியோர்களுக்கு 2018, 2021, 2022ல் அளித்த புகார் மனுக்களின் மீது தற்போது வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததற்கும்,

விசாரணை நடத்தி ரத்து செய்யாததற்கும் உரிய காரணங்கள், மோசடி ஆள்மாற்றம் மூலம் போலி பத்திரப்பதிவு செய்த K. சாத்தனூர் சார்பதிவாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் என்பன போன்ற விவரங்களை 10 இனங்களில் தகவல்களாக வழங்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரரின் மனுவினை உரிய தகவல்கள் வழங்கும்பொருட்டு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 30.11.2022 தேதியிட்டு திருச்சி மாவட்டப் பதிவாளர் அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 03.01.2023 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மனுவை பதிவுத்துறைத்தலைவர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து திருச்சி மாவட்டப்பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் 05.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவானது 23.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக திருச்சி துணைப்பதிவுத்துறைத்தலைவருக்கு மாற்றம் செய்யப்பட்டு அதன் விவரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்மேல் திருச்சி துணைப்பதிவுத்துறைத்தலைவரால் மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவிற்கு 02.02.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 27.02.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 3646/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் 10.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் மற்றும் அவரது கணவர் திரு குணசேகரன் ஆகியோர் நேரில் ஆஜரானார்கள். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஆ. சுரேஷ்குமார். பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், திருருச்சிராப்பள்ளி ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 05.01.2023, 23.01.2023, 02.02.2023 ஆகிய தேதிகளிலும், மீண்டும் 10.10.2024 தேதியிட்ட கடிதத்தின்

வாயிலாகவும் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிவித்தார். அதற்கு மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. மனுதாரர் தனது தயாருக்கு சொந்தமான சொத்தினை போலி ஆவணங்கள் மூலமாக போலியாக பத்திரப்பதிவு செய்த கே.சாத்தனூர் சார்பதிவாளர் மீது 2018, 20121 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் அளித்த புகார் மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை கோரியுள்ளார். அதுகுறித்து பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

6. இதே பொருள் தொடர்பாக மனுதாரரின் மற்றொரு இரண்டாம் மேல்முறையீட்டு SA 2445/A/2018 என்ற வழக்கில் 07.01.2019 அன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்விசாரணையின்போது அவ்வழக்கிற்கான பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி நேரில் ஆஜராகி, மனுதாரரின் 27.11.2018 தேதியிட்ட புகார் மனுவானது மாவட்ட குற்றப்பிரிவு குற்றஎண்.01/19ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கு புலன்விசாரணையில் இருந்துவருவதாகவும், வழக்கு விசாரணையினை துரிதப்படுத்தி எதிரியை கைது செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்வதாக விசாரணையின்போது உறுதியளித்ததாகவும், ஆனால் நாளது தேதிவரையில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லையென்றும் தெரிவித்தார். இதுவே தனது பிரதான கோரிக்கையாகவும் மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார்.

7. அதனைத்தொடர்ந்து மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் Crl.O.P(MD) No.8800 of 2019 என்ற வழக்கினை தாக்கல் செய்ததாகவும், அதற்கான உத்தரவு 08.11.2019ல் பிறப்பிக்கப்பட்டதாகவும், அதில் இவ்வழக்கிற்கான எதிர்மனுதாரரான காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு (DCB) திருச்சி, குற்ற வழக்கு எண்.1/2019 குறித்து எதிர்மனுதாரரிடம் புலன்விசாரணை மேற்கொண்டு, அதுகுறித்த இறுதி அறிக்கையினை நான்கு வாரகாலத்திற்குள் தாக்கல் செய்யுமாறு வழங்குமாறு உத்தரவிடப்பட்டதாகவும், ஆனால் அவ்வுத்தரவு நாளது வரையில் மேற்படி அலுவலரால் நிறைவேற்றப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

8. குற்ற வழக்கு எண்.1/2019க்கான இறுதி அறிக்கை / குற்றப்பத்திரிக்கை ஆகியவை திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றப்பிரிவு அலுவலரால் தாக்கல் செய்யப்படவேண்டும் என்பதே மனுதாரர் தனது பிரதானக் கோரிக்கையாக விசாரணையின்போது தெரிவித்தார். அவ்வாறு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால்தான் போலிப்பத்திரப்பதிவு செய்த கே. சாத்தனூர் சார்பதிவாளர்

மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் மீது நடவடிக்கை தொடர ஏதுவாக அமையும் என்றும் மனுதாரர் தெரிவித்தார்.

9. மனுதாரரின் வாதங்களை ஆணையத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டது. மனுதாரரின் குற்ற வழக்கு எண்.1/2019 தொடர்பாக மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களை விசாரணை செய்வது அவசியமாகிறது. எனவே, இவ்வழக்கானது 29.04.2025 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. மேற்படி தேதியில் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து, இவ்வழக்கிற்கான பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், திருச்சிராப்பள்ளி மற்றும் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி ஆகியோர்களுக்கு ஆணையத்திலிருந்து விசாரணை அறிவிப்பு அனுப்பப்படவேண்டும் என்று ஆணையத்தால் உத்தரவிடப்பட்டு, அன்றைய விசாரைணக்கு மனுதாரர் ஆஜராக வேண்டியதில்லையென்பதை ஆணையம் மனுதாரருக்கு எடுத்துரைக்கிறது.

10. ஆணையத்தின் 29.04.2025 தேதியிட்ட அடுத்த விசாரணைக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்ற வழக்கு எண்.1/2019க்கான அனைத்து ஆவணங்களுடன் நேரில் ஆஜராகவேண்டும். மேலும் இதே பொருள் குறித்து ஆணையத்தில் 07.01.2019 தேதியன்று நடைபெற்ற வழக்கு எண். SA 2445/A/2018 என்பதற்கான ஆணை நகல், Crl.O.P(MD) No.8800 of 2019 என்ற வழக்கிற்கான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணை நகல் மற்றும் குற்ற வழக்கு எண்.1/2019க்கான முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை இவ்வாணையுடன் திருச்சி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு ஆணையத்திலிருந்து அனுப்பப்படவேண்டும்.

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3646/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி

மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி. (இணைப்புகளுடன்)

**<u>மனுதாரர்:-</u>**

திருமதி S. உமா மகேஸ்வரி,
த/பெ R. குணசேகரன்,
பிளாட் எண்.149, அருண் நகர்,
திருவளர்ச்சிப்பட்டி, ஏர்போர்ட் அஞ்சல்,
செம்பட்டு (வழி), திருவெறும்பூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி -7

Copy to: File TK/PS